www.tamilarangam.net

# இந்திய மேலாதிக்கத்தை எதிர்ப்போம்!

'ஜனப் பிரியன்'
B.M. BOX 9376
LONDON WC1 3XX

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியா

- அகதிகளாக இடம் பெயர்ந்த எமது மக்களுக்கு அடைக்கலம் அளித்தது.
- எமது இளைஞர்களுக்கு இராணுவ பயிற்சியும், ஆயுதங்களும், முகாம்கள் அமைத்து செயல்பட அனுமதியும் வழங்கியது.
- நாம் பாதிக்கப்படும் போதெல்லாம் குரலெழுப்பி, சிறீலங்கா இனவெறி அரசைக் கண்டித்தது.
- பலத்த எதிர்ப்புகள் மத்தியிலும் நிவாரண உதவிகள் வழங்கியது.

இந்தியாவின் இந்நடவடிக்கைகள் தாம் எமக்கு அதன் மீது, நம்பிக்கையையும், நன்மதிப்பையும் கொடுத்தது. இதனாலேயே இந்திய இராணுவம் எமது மண்ணில் வந்திறங்கியபோது, எமது மக்கள் மாலையிட்டு வரவேற்றார்கள், விருந்துபசாரம் செய்தார்கள். தாம் பட்ட கஷ்டங்கள் அனைத்துக்கும் ஒரு முடிவு வந்துவிட்டதாக எண்ணினார்கள்.

ஆனால் வெகு விரைவிலேயே நாம் இழைத்த மாபெரும் தவறை உணரவேண்டி நேரிட்டது. இன்று இந்திய இராணுவம் எமது அப்பாவி மக்களையும், இளைஞர்களையும் கொன்றொழிக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. பல்லாயிரக்கணக்கான மக்களை அகதிகளாக்கியுள்ளது. எந்த எதிரியிடமிருந்து எம்மைக் காப்பாற்றும் என்று கருதியிருந்தோமோ அந்த சிறீலங்கா இனவெறி அரசினைப் பாதுகாப்பதே அதன் குறிக்கோளாகியுள்ளது.

இந்தியாவின் இந்நிலைப்பாட்டினைப் புரிந்து கொள்வதற்கு கடந்த காலங்களிலான அதன் நடவடிக்கைகளை நோக்குதல் அவசியமாகிறது.

முன்னைய அரசாங்கங்களினாலும் தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட போதும், தற்போதைய U.N.P அரசினால் கடைப்பிடிக்கப்படும் பொருளாதாரக் கொள்கைகளும், வெளி நாட்டுக் கொள்கைகளும் வளர்ச்சி அடைந்த கட்டத்தில் இருந்தே இந்தியா தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொள்ளத் தொடங்கியது.

அண்மையில் கைச்சாத்திட்ட சமாதான ஒப்பந்தத்தின் பிரதான பகுதி , இலங்கை அரசின் வெளிநாட்டுக் கொள்கையை கட்டுப்படுத்துவதில் இந்திய அரசுக்குள்ள அதிகாரத்தைப் பற்றியதாகவே உள்ளது.

இனக்கலவரத்தின்போது இலங்கையில் வாழும் இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர்கள் பெருமளவில் பாதிக்கப் பட்டபோதும் அது குறித்து ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வடிக்கவில்லை. இலங்கையில் ஏனைய வெளிநாட்டுச் சக்திகளின் கை ஓங்கிய பின்னரே இந்தக் கண்ணீர் இந்தியாவின் கண்களில் தோன்றியது,

தமிழ்மக்கள் மத்தியில் பல்வேறு இயக்கங்கள் இருக்கவேண்டும் என்பதை விரும்பியும், அவர்களுக்கிடையில் பகைமையான போக்குகள் வளர்வதை ஊக்குவித்தும் வந்துள்ளது. இயக்கங்களுக்கிடையிலான மோதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றோ, தமிழ் மக்கள் ஓரணியின் கீழ் அணிதிரட்டப்பட வேண்டும் என்றோ முயலவில்லை. மாறாக சிறீலங்கா அரசுடனான தனது ஒப்பந்தங்களை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றே நிர்ப்பந்தித்து வந்துள்ளது.

T.E.L.O இந்திய அரசின் மிக நம்பிக்கையைப் பெற்ற இயக்கம் என்றும் அவர்களுடைய கையாட்களாகவே செயற்படுகிறார்கள் என்றும் கருதப்பட்டது. ஆனால் T.E.L.O இயக்கம் தலைவர் உட்பட ஒட்டுமொத்தமாக அழிக்கப்பட்ட போது அதற்கெதிராக அலட்டிக் கொள்ளவில்லை.

தனது எதிர் பார்ப்புகளையும் மீறி இயக்கங்கள் வளர்வதை தடுத்து வந்துள்ளது. உதாரணமாக P.L.O.T இயக்கம் வேறுவழிகளில் கொள்வனவு செய்த பல லட்சம் பெறுமதியான பெருந்தொகையான ஆயுதங்களை கைப்பற்றியது.

தமிழ் மக்களாலும் இயக்கங்களாலும் நிராகரிக்கப்பட்ட பிற்போக்கான TULF உடன் நெருங்கிய உறவு கொண்டுள்ளது.

இவை போன்ற பல்வேறு நிகழ்வுகள் இந்தியா, சிறீலங்கா அரசை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்காக செயற்படுத்திய திட்டத்தில் ஓர் அங்கமாகவே, தமிழ் மக்களின் பிரச்சினை கையாளப்பட்டுள்ளது என்பதை தெளிவாக உணர்த்துகின்றன.

தெற்காசிய உபகண்டத்தில் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்ட முனைந்து வரும் இந்தியப் பிராந்திய வல்லரசானது இராணுவ பலத்திலும், ஆதிக்க வலைவீச்சிலும் மற்றய பிற்போக்கு அரசுகளுக்கு எவ்வகையிலும் சளைத்ததல்ல. தனது சொந்த நாட்டிலேயே பல்வேறு தேசிய இனங்களின் போராட்டங்களையும், ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிகளையும் வன்முறையால் அடக்கி வருகிறது.

பஞ்சாபிலும், அஸ்ஸாமிலும், பங்களாதேசிலும் புரிந்த கொலைகளின் இரத்தக் கறைகளை மூடி சமாதானப் போர்வை போர்த்து வந்த இந்திய அரசை எமது மண்ணுள் நுழைய விட்டு தனது பலத்தை நன்கு நிலைநிறுத்தத் துணை புரிந்தது யார்?

கூட்டணித் தலைமைகள் அன்று தங்கள் அரசியல் வங்குரோத்தினால் இந்திய மாயையை தமிழ் மக்களிடம் விதைத்தனர். அதன் தொடர்ச்சியாக ஆயுதந் தாங்கிய இயக்கத் தலைமைகள் எமது போராட்டத்தையே இந்தியாவிடம் அடகு வைத்தனர்.
இன்று, சாகும்வரை போராடுவோம் என்று சபதம் பூண்டுள்ள விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடமும் இதற்கு விதிவிலக்கல்ல. கடந்த நாலு வருடங்களாக இந்திய அரசு ஈழ அரங்கில் விளையாடிய சதுரங்கத்தில் விடுதலைப் புலிகளும் பகடைக்காய்களே. பல இளம் புலிகள் போர்க்களத்தில் தீரமாகப் போராடி மாண்டாலும் - புலிகளின் தலைமைப்பீடம், எமது விடுதலைப் போராட்டத்தை ஓர் வெறும் இனவெறி யுத்தமாக - தமிழ்ப் பரப்பில் தமது தனித்த ஆதிக்கவெறிப் போட்டிச் சண்டையாக- குறுக்கி விட்டனர். அப்பாவிச் சிங்கள மக்களை படுகொலை செய்தனர். மற்றய இயக்கங்களை அடியோடு கொன்றொழித்தனர். எமது இயக்கங்களுக்கிடையே இருந்த எட்டா போட்டியும் உட் பூசலும் இரு வருடங்களில் தமிழீழம் காண்போம் என்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடாகசக் கழுகுகளும் தான் எம்மை இப்ப இந்தப் படு குழிக்குள் தள்ளியது. மொத்தத்தில் எமது விடுதலைப் போராட்டத்தின் தார்மீக அடிப்படையையே முற்றாக கொச்சைப்படுத்தி விட்டனர்.

இந்திய அரசைப் பற்றியும், போராட்டத்தைப் பற்றியும் சரியான புரிந்துணர்வின்மையே ஈழத்தில் நடந்துகொண்டிருக்கும் இரத்தக்களரி எமக்கு உணர்த்துகிறது. பலம் வாய்ந்த அடக்குமுறை இராணுவம் ஒன்றை எதிர்கொள்ளும்போது பொதுமக்களின் இழப்பும் போராளிகளின் அளவுக்கதிகமான இறப்பும் பாரியதாகவே இருக்கும் என்பது தெளிவு. ஆனால் சிறிய எம்மினம் தொடர்ந்து தன் மக்களையும் போராளிகளையும் தேவையின்றி இழந்துகொண்டிருக்கலாமா? மக்களின் சார்பில் போராடிக்கொண்டிருப்பதாக கூறிக் கொள்ளும் ஓர் விடுதலை இயக்கமானது பொதுமக்கள் இழப்பை கருத்தில் கொண்டு போர்த்தந்திரோபாய அடிப்படையில் பின்வாங்குதலை மேற்கொள்வது ஒன்றும் கோழைத் தனமான செயலல்ல. வெற்றியீட்டிய பல கொரில்லா இயக்கங்கள் இவ்வுபாயத்தை தேவையானபோது கையாண்டுள்ளன. இதை விடுத்து சங்ககால இலக்கியங்களில் வரும் வீரக் கதாநாயகர்களாக முனைவது அபத்தமானதும் அநியாயமாகப் போராளிகளை கொன்றொழிக்கும் முயற்சியுமாகும். எனவே எமது மக்களின் பாதுகாப்பையும், இறைமையையும் உறுதி செய்யும் வகையில்,

சரியான அரசியல் வழிகாட்டலில் யுத்த தந்திரக் கொள்கையினை வகுப்போம்.
எமது மக்களின் பலத்தில், சொந்தக் கால்களில் தங்கி நின்று போராடுவோம்.

18.10.87

ஜப்பிறியல்
BM BOX 9376




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்